DEPOSITION OF WITNESS
Chapter XXIII Code of Criminal Procedure
**IN THE COURT OF FAST TRACK MAHILA COURT NAGAPATTINAM.**

**Special Sessions Case No. : 01**/2018

Deposition of Witness for Prosecution : PW- 2

| | | | |
|---|---|---|---|
| Name | : ரமேஷ் | Village | : |
| Father's Name | : | Taluk | : |
| Age | : | Religion | : |
| Calling | : | Caste | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 01.11.2019.

**முதல் விசாரணை**

நான் வடபாதி தெரு, நெய்தவாசல் என்ற முகவரியில் வசித்து வருகிறேன். எனக்கு ஒரே மகள் பெயர் அபிநிஷியா. என் மகள் பிறந்த தேதி 27.04.2002. என் மகள் 11ம் வகுப்பு வரை தான் படித்துள்ளார். தற்போது என் மகள் வீட்டில் தான் இருக்கிறாள். ஆஜர் எதிரியை தெரியும். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு 10ம் வகுப்பிலிருந்து மாறி 11ம் வகுப்பு படித்துகொண்டிருந்தார். அப்போது என் மகளுக்கு வயிற்று வலி ஏற்பட்டதால் என் மனைவி செம்பனார் கோவில் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று காண்பித்தார், அதற்கு மருத்துவர் தெம்பு இல்லை என்று கூறி சத்துமாத்திரை கொடுத்தார். அதன் பிறகு என் மகளுக்கு வயிற்று வலி ஏற்பட்டதால் என் மனைவி தனியார் மருத்துவமனை செம்பனார் கோவிலுக்கு அழைத்து சென்று காண்பித்தார் அவர்கள் ஸ்கேன் செய்து பார்க்க வேண்டும் என்று சொன்னார்கள். அதன் பிறகு ஸ்கேன் செய்து பார்த்துவிட்டு என் மகள் 7 மாத கர்ப்பமாக இருப்பதாக கூறினார்கள். என் மனைவி என் மகளிடம் இது சம்பந்தமாக விசாரித்தபோது ஆஜர் எதிரிக்கும் தனக்கும் பழக்கம் இருப்பதாகவும், பஸ்சில் செல்லும்போது அதில் நடத்துநரான ஆஜர் எதிரி தன்னை திருமணம் செய்து கொள்கிறேன் என்று சொல்லி பழகியதாகவும், தர்மகுளம் to வானகிரி சாலையில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைபள்ளிக்கு பின்புறம் உள்ள சந்தானபிள்ளைக்கு சொந்தமான காலிஇடத்தில் 2016ம் வருடம் டிசம்பர் மாதம் 25தேதிக்கு முன்பாக ஆஜர் எதிரி என் மகளுடன் உடலுறவு கொண்டதாக கூறினார். அதன் பிறகு என் மகளுடன் பல முறை

உடலுறவு வைத்துக்கொண்டதாகவும் கூறினார். வீட்டில் சொன்னால் உன் பெற்றோரை பஸ் ஏற்றி கொண்றுவிடுவேன் என்றும், என் மகளை அசிங்கபடுத்திவிடுவேன் என்று சொல்லி பயமுறுத்தியதால் என் மகள் எங்களிடம் இந்த தகவலை மறைத்துவிட்டதாக கூறினார். அதன் பிறகு பூம்புகார் காவல் நிலையம் சென்று நானும் என் மனைவியும் புகார் கொடுத்தோம். அதன் பிறகு எனது மகளை சீர்காழி அரசு மருத்துவமனைக்கு மருத்துவ பரிசோதனைக்கு அழைத்து சென்றார்கள். அதன் பிறகு நாகப்பட்டினம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்-1 அவர்களிடம் 164(5) கு.வி.மு.சா வாக்குமூலம் பதிவு செய்ய அழைத்து சென்றார்கள். வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பு சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய மனுதாக்கல் செய்யப்பட்டு வேறு வாய்தா கேட்கப்பட்டது. ஆனால் மேற்சொன்ன மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.